பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பள்ளிக்கரணை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறானாளிகளுக்கு அடையாள அட்டையினை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நேற்று (20.12.2025) வழங்கினார். இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), த.விசுவநாதன் (கல்வி), மண்டலக்குழுத் தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நேற்று (20.12.2025) சுற்றுலா துறை மற்றும் இந்து குழுமம் இணைந்து தயாரித்த Fairs & Festivals என்ற புத்தகத்தினை சென்னை, நுங்கம்பாக்கம் தாஜ் கோரமண்டல் ஓட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார்கள். இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, காட்டுமன்னார் கோவில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், இந்து குழும முதன்மை செயல் அலுவலர் எல். வி. நவனிநீத், எழுத்தாளர் ஆ.கோபண்ணா, சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர்.சுப.வீரபாண்டியன், மாநிலத் தலைவர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கம் மதுக்கூர் ராமலிங்கம், சுற்றுலாத்துறை இணை இயக்குனர் திருமதி.அ. சிவப்பிரியா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி சி. லட்சுமி பிரியா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்று தொடங்கி டிச.24 வரை நடைபெறுகிறது! தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில்

மகளிர் சுய உதவிக்குழுக்களின் 'உணவுத் திருவிழா'!

சென்னை – பெசன்ட் நகர் கடற்கரையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச.21-

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில்மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழா21.12.2025 முதல் 24.12.2025 வரை சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில் நடைபெறுகிறது.

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுய சார்பு பெற்று வருகின்றனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையின் கீழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தரமான, சத்தான, ஆரோக்கியமான, பாரம்பரிய உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றன.

சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்படும் தரமான உணவுகள், முன்னணி உணவகங்களின் உணவு வகைகளின் தரத்திற்கு சற்றும் குறைவில்லாமல் அவற்றிற்கு இணையாக சுவையும், தரமும் நிறைந்த உணவுகளை முறையான பயிற்சி பெற்று சுகாதாரமான முறையில் தயாரித்து விற்பனை செய்து வருவதால், சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களை அனைவரும் அறிந்திட வேண்டும் என்ற நோக்கத்துடனும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களின் உணவுத் திருவிழா, 21.12.2025 முதல் 24.12.2025 வரை சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில் நடைபெறுகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவை 21.12.2025 மாலை 04.00 மணியளவில், சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில் துவக்கி வைத்து சிறப்பித்திட அன்புடன் இசைந்துள்ளார்கள்.

உணவுத் திருவிழாவில், உயர்தர உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகளுக்கு இணையான உணவுகள் மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறப்பு வாய்ந்த சுவையும், தரமும் நிறைந்த அரியலூர் தோசை வகைகள், சென்னை Street Food, செங்கல்பட்டு காய்கறி தோசை, கருவாடு சூப், கோயம்புத்தூர் கொங்கு மட்டன் பிரியாணி, கடலூர் மீன் புட்டு, திண்டுக்கல் சிக்கன் பிரியாணி, தருமபுரி ராகி அதிரசம், ஈரோடு கோதுமை கீரை போண்டா, கள்ளக்குறிச்சி வரகு அரிசி பிரியாணி, காஞ்சிபுரம் கோவில் இட்லி, கரூர் தோல் ரொட்டி - மட்டன் கிரேவி, கிருஷ்ணகிரி பருப்பு அடை - காரச் சட்னி, மதுரை சிக்கன் பிரியாணி, பனங்குருத்து மில்க் ஷேக், மயிலாடுதுறை இறால் வடை, நாகப்பட்டிணம் நாகூர் பிரியாணி, நாமக்கல் பள்ளிப்பாளையம் சிக்கன், நீலகிரி ராகி களி அவரை குழம்பு (கோத்தர் உணவு), புதுக்கோட்டை கோதுமை பணியாரம், ராமநாதபுரம் மீன் உணவுகள், ராணிப்பேட்டை ஆற்காடு பிரியாணி, சேலம் முட்டை தட்டு வடை, சிவகங்கை நெய் சாதம், தென்காசி உளுத்தங்களி, தஞ்சாவூர் மட்டன் உணவுகள், திருவள்ளூர் நெய்தல் உணவுகள், திருவண்ணாமலை சிமிலி, தூத்துக்குடி இலங்கை யாழ் உணவுகள், திருநெல்வேலி நரிப்பயிறு பால், திருப்பத்தூர் ஆம்பூர் பிரியாணி, திருப்பூர் முட்டை ஊத்தாப்பம், திருச்சி வரகு மட்டன் பிரியாணி, திருவாரூர் பனை உணவுகள், தேனி பால் கொழுக்கட்டை, வேலூர் தேங்காய் போளி, விழுப்புரம் சிறுதானிய சிறப்பு உணவுகள், விருதுநகர் புரோட்டா கடை உள்ளிட்ட 235க்கும் மேற்பட்ட உணவு வகைகளை உடனடியாக சமைத்து, சுகாதார மான முறையில் பரிமாறும் வகையில் 38 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், புதிய முன்னெடுப்பாக பல்வேறு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட 12 அரங்குகளில் கடலூர் காய்கறிகள், செங்கல்பட்டு - கிருஷ்ணகிரி எண்ணை மற்றும் அடுப்பில்லா முறையில் (No Oil No Boil) தயாரித்த உணவுகள், காஞ்சிபுரம் 20 வகையான முட்டை மிட்டாய்கள், கன்னியாகுமரி பல தரப்பட்ட சிப்ஸ் வகைகள், பெரம்பலூர் முத்து சோளம், நாமக்கல் புரதச் சத்து நிறைந்த முட்டை உணவுகள், ராமநாதபுரம் பனை மதிப்புக் கூட்டுப் பொருட்கள், நீலகிரி பாரம்பரிய தேநீர், சேலம் மளிகைப் பொருட்கள், சிவகங்கை செட்டிநாட்டுத் தின்பண்டங்கள், திருவள்ளூர் 90களில் (90s Kids) பிரசித்திப் பெற்ற 30 வகையான தின்பண்டங்கள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

துவக்க நாளான இன்று 21.12.2025 மட்டும் மாலை 04.00 மணி முதல் இரவு 09.00 மணி நடைபெறும் உணவுத் திருவிழா, 22.12.2025 முதல் 24.12.2025 வரை மதியம் 12.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை நடைபெறும்.

இந்த உணவுத் திருவிழாவில் மாலை நேரங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சி களும் நடைபெறும். அனுமதி இலவசம்.

உணவுத் திருவிழா நடைபெறும் நாட்களில் உணவு வகைகளின் தரத்தை மேம்படுத்துவது, சுகாதாரமான முறையில் பரிமாறுவது, விற்பனை நுணுக்கங்கள், சந்தைப் படுத்துதலில் உள்ள சவால்களை எவ்வாறு களைவது போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவிற்கு பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக வருகை தந்து, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் சத்தான, சுவையான, ஆரோக்கியம் நிறைந்த உணவுப் பொருட்களை உண்டு மகிழ்ந்திடவும், வாங்கிச் சென்றிடவும்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்தினார்!

பகுதிப் பிரதிநிதி கொடி சுரேஷ் இல்ல புதுமனை திறப்பு விழா!

வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலை! துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை. டிச.21-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்குப் பகுதி 139வது "அ" வட்ட பகுதி பிரதிநிதி கொடி சுரேஷ் அவர்களின் புதுமனை புகுவிழா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன். முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன். பொதுக்குழு உறுப்பினரும். 140வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையிலும். சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி. சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும். பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலையிலும். பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன். களக்காடி எல்லப்பன். மின்னல் கந்தப்பன். பகுதி அவைத்தலைவர் டி.என்.சிவமணி. பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன். மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சைதை சாதிக். 139வது அ வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர். 139வது வட்ட கழக செயலாளர் அட்கோ கமலநாதன், ஆகியோர் வரவேற்பில் எண். 85/37. மேற்கு ஜோன்ஸ் ரோடு, மேற்கு சைதாப்பேட்டை. 18கே பஸ் டிப்போ அருகில். புதிதாக கட்டப்பட்டுள்ள இல்லத்தின் புதுமனை புகுவிழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் குத்துவிளக்கேற்றி வாழ்த்தினார்.

மேலும் இந்நிகழ்விற்கு பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார். மாவட்ட. மாநில நிர்வாகிகள் பாலவாக்கம் த.விஸ்வநாதன். வேளச்சேரி எஸ். பாஸ்கர். ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள். த.சம்பத், ஆர்.ரமேஷ். கவிதாகௌதமன். இ.முருகேசன். ஆர்.ராஜ்குமார். மாவட்ட அமைப்பாளர்கள் நா.மணி கண்டன். கோ.பாஸ்கர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார்.

உள்ளிட்ட கழக நிர்வாகிகளை சவுண்டு சர்வீஸ் எம்.மூர்த்தி. பகுதி பிரதிநிதி கொடிசுரேஷ் ஆகியோர் வரவேற்றனர்.

எஸ்.புகழேந்தி தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி – வ.பெ.சுரேஷ் முன்னிலை!

52வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்! 2000 நபர்களுக்கு நலஉதவிகள்!

சைதை சாதிக் சிறப்புரை ! ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை. டிச-21-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்ட கழகம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (22.12.2025 திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் பழைய ஆட்டு தொட்டி சாலை. ஓ.எஸ்.எச்.ரோட்டில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் எஸ்.புகழேந்தி தலைமை வகிக்கிறார். ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ. பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ். ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.செந்தில்குமார். மு.கோபி. கீதாசுரேஷ் எம்.சி. எஸ்.திருஞானம். இரா.பாலன். எம்.எல்.ரவி. ஜெ.கௌரீஸ்வரன். பாலா லட்சுமணன். ரெயின்போ என். விஜயகுமார். எம்.கே.இஸ்மாயில். கு.ரமேஷ். வி.மலையம்மாள். இ.மதன். விஜயலட்சுமி விஜயகுமார். எஸ்.ரமேஷ். பா.வேளங்கன்னி. ஜி.எஸ்.முருகன். பா.சுரேகா. ஜெயாவினோர் ரீதர். ஆர்.டி.ஜெய்சங்கர். பிரியாணி எம்.பாலா. எஸ்.சசிதரன். த.ஜெயபால். பி.சேகர். கு.சுந்தர். லோ.மோகன். பி.ஜெயலட்சுமி. க.கலைச்செல்வன். ஜி.சதிஷ்குமார். என்.கிருஷ்ணன். ஆர்.வி.கணேஷ். பி.கண்ணன். கே.கோவிந்தராஜ். இரா.மருதுபாண்டியன். எஸ்.முகமதுமொய்தீன். எம்.ரீகார்த்திகேயன். ஆர்.விஜயவர்மன்.

எ.மலர்(எ) தனசேகர். எம்.இளங்கோவன். எஸ்.கயல்விழி. ஆர்.எம்.மோசஸ். டாஸ்மார்க் சிவா. ஏ.ரோமி. எம்.முருகன். கோ.ஹரிஸ்குமார். கோ.வேலுமணி. எச்.கருணாகரன். ப.அரசன். பி.ஷாஜகான். ஒய்.கபாலி. ஜ.நேருராஜன். பி.அனிதா. என்.ராஜேந்திரன். கே.பி.கிருஷ்ணராஜ். ஆகியோர் வரவேற்கின்றனர்.

வ.பெ.ர.பாரதி. எம்.தனஞ்செழியன். ஜி.ஹரிகிருஷ்ணன். பி.திருப்பதி. இளஞ்சூரியன். மணிவண்ணன். சுரேஷ்குமார். மகேஷ்வரன். வருணிஸ்வரன். பாலாஜி. ராபர்ட். விஷால். சீனிவாசபாபு. மணிகண்டன். அசிரிய இருதயராஜ். சிவக்குமார். ஹரிரீதர். ரவிக்குமார். மதன்குமார். லியதரன். சாம்.பாரதி. கே.ராஜன். எம்.சுரேஷ். செல்வம். மணி. பி.கார்த்தி. எஸ்.கில்பர்ட். ஜெ.சதிஷ்குமார். மோகன்ராவ். இரா.செல்வம். இ.முத்துகுமார். ஏ.ராஜாமணி.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

க.நாகம்மை. வண்ணைபுகாரி. கொரியர் பி.முருகன். தா.இளையஅருணா. அ.சுபேர்கான். ந.மனோகரன். பி.டி.பாண்டிசெல்வம். என். மருதுகணேஷ். நா.சண்முகம் கி. ராஜேந்திரன். மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

ஜ.லூர்தர்மார்டின். ஜ.லாரன்ஸ். ஆ.வேளங்கண்ணி. எம்.பன்னீர் செல்வம். எஸ்.வினோத்குமார். ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இரா.ரங்கா தலைமை! தியாகராயர் நகர் மேற்குப் பகுதி வர்த்தக அணி சார்பில்

துணை முதல்வர் பிறந்தநாள் விழா - 500 பேருக்கு அறுசுவை உணவு!

மயிலை த.வேலு – காசி முத்து மாணிக்கம் – ஜெ.கருணாநிதி – கே.ஏழுமலை வழங்குகின்றனர்!

சென்னை. டிச.21-

தியாகராயர் நகர் மேற்கு பகுதி வர்த்தக அணி பகுதி துணை அமைப்பாளர் இரா.ரங்கா தலைமையில் கொள்ளபுரி அம்மன் கோவில் தி.நகரில் இளந்தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு 500 பேருக்கு அறுசுவை பிரியாணி மயிலை த.வேலு எம்.எல்.ஏ., காசி முத்து மாணிக்கம். ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., எஸ்.மோகன். மயிலை பாலு. எஸ்.உமாசங்கர் ஆகியோர் வழங்குகின்றனர்.

தியாகராயர் நகர் மேற்குப் பகுதி வர்த்தக அணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49-வது பிறந்த நாளை முன்னிட்டு 500 பேருக்கு அறுசுவை பிரியாணி இன்று (21.12.25) மதியம் 12.30 மணிக்கு கொள்ளபுரி அம்மன் கோவில் தியாகராய நகரில் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

சிறப்பு அழைப்பாளர்கள் மயிலை த.வேலு எம்எல்ஏ. சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் வர்த்தக அணி மாநில செயலாளர்காசிமுத்து மாணிக்கம். தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி செயலாளர் ஜெ.கடுணாநிதி எம்எல்ஏ. தி.நகர் மேற்குப் பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் கோ.சு.மணி. தலைமை செயற்குழு எஸ்.மோகன். வர்த்தக மாநில துணை தலைவர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி. , மயிலை ஆர்.பாலு. வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.உமாசங்கர். இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் முன்னிலை பி.ஜெயக்குமார். 133-வது வட்ட செயலாளர் பி.மாரி. 133 அ வட்ட செயலாளர் பாபா சுரேஷ். பகுதி துணை செயலாளர் மற்றும் வர்த்தக அணி தலைவர். துணை தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள். 133-வது வட்ட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்கின்றனர்.

எம்.ரமேஷ். எம்.வெங்கடேசன். டி.நரேஷ் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

கலைஞர் நகர் தெற்குப் பகுதியில்

என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி பரப்புரைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிவிப்பு!

சென்னை. டிச.21-

என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி தெருமுனை பிரசார கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இது குறித்து பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிவிப்பு வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம். கலைஞர் நகர் தெற்கு பகுதி. 138 அ வட்டத்தில் இன்று (21.12.2025) காலை 10 மணி முதல் 240. 255. 256. 258. 264 மற்றும் 265 பாகங்களில் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" தெருமுனை கூட்டம் வட்ட செயலாளர் சு. ஜம்புமுருகன் முன்னிலையில் . விருகம்பாக்கம் எம்.எல்.ஏ. ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா. கணக்குநிலைகுழு தலைவர் க.தனசேகரன். மாநில வர்த்தகரணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம். தெற்கு பகுதி செயலாளர் கே.கண்ணன். தொகுதி பொறுப்பாளர் வே.உமாகாந்த் கலந்துகொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

பாக உறுப்பினர்கள். பாகத்துக்குட்பட்ட நிர்வாகிகள். பாகத்துக்குட்பட்ட தி.மு.க. கழகத்தினர். கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.'

இவ்வாறு கலைஞர் நகர் தெற்குப் பகுதி தி.மு.க. செயலாளர் கே. கண்ணன் தெரிவித்துள்ளார்.

நே.சிற்றரசு – எழிலன் நாகநாதன் – வினோத் வேலாயுதம் – சைதை சாதிக் பங்கேற்பு!

112வது வட்டத்தில் - "என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி" கூட்டம்!

வட்டச் செயலாளர் வரதை த.பரி அறிக்கை!

சென்னை. டிச.21-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்டச் செயலாளர் வரதை த.பரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்டத்தில் உள்ள BLA2. BLC. BDA. BYA ஆகியோர்களுக்கு பாகம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி என் வாக்குச்சாவடி! வெற்றி வாக்குச்சாவடி! பாகம் எண் 153 154 159 163 ஆகிய பாகங்களுக்கு கூட்டம் 112 வது வட்ட செயலாளர் வரதை த.பரி (எனது) தலைமையில்இன்று (21.12.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி அளவில் வரதராஜன்பேட்டை மெயின் ரோட்டில் அமைந்துள்ள பூங்காவில் கூட்டம் நடைபெறுகிறது. அன்று மாலை 6.00 மணி அளவில் பாகம் எண். 46 47 56 57 58. 63 பாகங்கள் கூட்டமும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு. ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் ந.எழிலன். ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம். ஆயிரம் விளக்கு தொகுதி மேற்பார்வையாளர் சைதை சாதிக். பொதுக்குழு உறுப்பினர் டி.ஜோஸ் டேனியல் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

மேலும் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி நிர்வாகிகள் புவி பாலாஜி. என். பி.இதயத் பாஷா. ஸ்டான்லிங் மோகன். பா.கமலக்கண்ணன். பொன்னம்மாள். எஸ்.பார்த்திபன். தா.ஜசன்ட் மற்றும் 112வது வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஜீ.வி.சரவணன். எம்.ஏ.ஜஸ்டின். 112வது வட்ட கழக நிர்வாகிகள். அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள். கழக முன்னோடிகள். இளைஞர் அணி. மகளிர் அணி மற்றும் BLA2. BLC. BDA. BYA மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 112வது வட்டச் செயலாளர் வரதை த.பரி அறிக்கை விடுத்துள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நாளை (22.12.2025 - திங்கள்கிழமை) காலை 9 மணிக்கு, ஆவடி ரயில் நிலையம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் நிவேதா ஜெசிகா, பி.டி.சி.செல்வராஜ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி. குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இன்று நடைபெறும் திமுக மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்படும் பொருள் குறித்தும்,

வரைவு வாக்காளர் பட்டியல் (Draft Electoral Rolls- SIR 2026) சரிபார்ப்பு குறித்து.

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில், சத்தியமூர்த்தி நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில், திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு துறை சார்பில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாமை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பணி ஆணைகளை வழங்கி மாற்றுத்திறனாளி பயனாளிகள் 3 பேருக்கு, ரூபாய் 3 லட்சம் மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட 3 மோட்டார் சைக்கிள் வாகனங்களை வழங்கினார். உடன் மாநகர மேயர் ஜி. உதயகுமார் மாநகர ஆணையர் திருமதி சரண்யா , சி. ஜெரால்டு, கே.ஜெ.ரமேஷ், மாநகர செயலாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் பேபி சேகர், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன் , டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சியில் வாக்குச்சாவடி. எண். 115. 128.ல். என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினார். உடன் சட்டமன்ற தொகுதி பார்வையாளர். திருமதி இராணி ரவிச்சந்திரன், பேரூர் செயலாளர் என் பாண்டியன், பேரூராட்சி மன்ற தலைவர். திருமதி. இல்லாமல்லி ஸ்ரீதர். பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆர்.வெங்கடேசன் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள். துணைத் தலைவர்.பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் இருந்தனர்.